தமிழ் முரசு

கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில்

# மாணவர் சேர்க்கை தொடக்கம்

**ஈரோடு, நவ. 11-** ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு கூட்டுறவு அஞ்சல் வழி மற்றும் பகுதி நேர பட்டய பயிற்சிக்கு மாணவர்கள் சேர்க்கை துவங்கி உள்ளது. ஈரோடு மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: ஈரோடு அடுத்துள்ள கொங்கம்பாளையத்தில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் செயல்படுகிறது. நடப்பு கல்வி ஆண்டில் 23வது அஞ்சல் வழி மற்றும் பகுதி நேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சி விரைவில் துவங்க உள்ளது. இவை பிரிவு பாடதிட்டத்தின் படி நடக்கும்.

இதற்கான விண்ணப்பங்கள் www.tncuicm.com என்ற இணைய தள முகவரியில் மட்டும் விண்ணப்பிக்கலாம். இணைய தளம் மூலம் ரூ.100 கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். 10ம் வகுப்பு, பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற கல்வி தகுதி உடையவராக இருக்க வேண்டும். பயிற்சி தொடர்பான விபரங்களை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் www.tncuicm.com என்ற இணைய தளம் மூலம் அறியலாம். கூடுதல் விபரங்களுக்கு ஈரோடு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு இணை பதிவாளர் ராஜ்குமார் கூறியுள்ளார்.



தீபாவளி பண்டிகை விடுமுறை காரணமாக திருப்பூரில் தங்கி உள்ள தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு இன்று புறப்பட்டு சென்றனர். இதனால் ரயில் நிலையத்தில் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. அடுத்த படம்: பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கண்காணிப்பு கேமரா மூலம் போலீசார் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நவம்பர் 11, 2023 சனிக்கிழமை

# தேர்தல் தொடர்

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் 4ம் தேதி தொடங்கி 22ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த 19 நாட்களில் மொத்தம் 15 அமர்வுகள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மிசோரம், சட்டீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் தெலங்கானா ஆகிய ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 3ம் தேதி அறிவிக்கப்பட உள்ளது. இந்த சூழலில் அதற்கு மறுநாளே நாடாளுமன்றம் கூடுகிறது. வரும் 2024ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக, இந்த ஐந்து மாநில தேர்தல் அரை இறுதியாக பார்க்கப்படுகிறது. இத்தகைய நிலையில் தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாளே நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கூடுகிறது.

முன்னதாக நாடாளுமன்றத்தில் அதானிக்கு எதிராக கேள்வியெழுப்ப தொழிலதிபர் ஹிராநந்தானியிடம் திரிணாமுல் காங்கிரஸ் எம்பி மஹுவா மொய்த்ரா லஞ்சம் பெற்றது தொடர்பான குற்றச்சாட்டு குறித்து மக்களவை நெறிமுறைக் குழு விசாரணை நடத்தி, அதன் அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது. இந்த அறிக்கையில், 'மஹுவா மொய்த்ராவை பதவி நீக்கம் செய்ய பரிந்துரைக்கப்பட்டது. இதன்மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், 6-4 என்ற கணக்கில் பரிந்துரை நிறைவேறியது. மஹுவா மொய்த்ரா லஞ்சம் பெற்றது தொடர்பாக ஒன்றிய அரசு விசாரணை நடத்தி லஞ்சம் எவ்வாறு பெறப்பட்டது என்பதை வெளிக்கொணர வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விவகாரத்தில் திரிணாமுல் காங்கிரஸ் எம்பி மஹுவா மொய்த்ரா எம்பி பதவியை பறிக்க வலியுறுத்தி, நாடாளுமன்ற நெறிமுறைக் குழு மக்களவை சபாநாயகருக்கு பரிந்துரை செய்துள்ளது. அதனால் வரும் குளிர்கால கூட்டத் தொடரில், எம்பி மஹுவா மொய்த்ராவுக்கு எதிராக நாடாளுமன்ற நெறிமுறைக் குழுவின் அறிக்கை மக்களவையில் தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. அதன்மீதான விவாதத்தின் பின், அவரை பதவி நீக்கம் செய்வது குறித்து முடிவு எடுக்கப்படலாம். மேலும் நடந்து முடிந்த நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் மூன்று முக்கியமான குற்றவியல் சட்டங்களின் பெயர் மாற்றம் குறித்த மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இதுதொடர்பான, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா - 2023, பாரதிய நியாய சன்ஹிதா - 2023 மற்றும் பாரதிய சாக்ஷியா - 2023 ஆகிய மூன்று மசோதாகள் கடந்த ஆக. 11ம் தேதி மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டன. இம்மசோதாக்கள் முறையே இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி) - 1860, குற்றவியல் நடைமுறை சட்டம் (சிஆர்பிசி) - 1973 மற்றும் இந்திய சாட்சிகள் சட்டம் - 1987 ஆகியவைகளுக்கு மாற்றாக இருக்கும் என்று ஒன்றிய அரசின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எதிர்கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், சில திருத்தங்களுடன் வரும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் மேற்கண்ட மசோதாக்கள்நிறைவேற்றப்படலாம். ஆளும்பாஜக அரசின் கடைசி குளிர்கால கூட்டத் தொடர் என்பதால், தேர்தலை மையப்படுத்திய மசோதாக்கள், விவாதங்கள் நடைபெற வாய்ப்புள்ளது.

# உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

**ஈரோடு, நவ. 11-** உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடந்தது.

சோயா, மொச்சை பயிரில் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் கள ஆய்வு ஆகியவை பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடந்தது. இந்த கள ஆய்வு, வயல் விழாவில் ஈரோடு மாவட்ட அளவில் 7 வட்டாரங்களில் இருந்து 67 விவசாயிகள் பங்கேற்றனர்.

இப்பயிற்சி முகாமில் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் சக்திவேல் வரவேற்றார். சோயா மொச்சை வயல் கள ஆய்வுக்கு பின் பேராசிரியர் பாலசந்தர், இணை பேராசிரியர் ஆனந்தம் ஆகியோர் வேளாண் பயிர்களில் உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண் மற்றும் பயிருக்கு ஏற்படும் நன்மைகளை விளக்கி கூறினர். முகாமில், ஈரோடு மாவட்ட வேளாண் துணை இயக்குநர் தமிழ் செல்வி, அமுதா, சோபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொங்கல் பண்டிகைக்கான

# இலவச வேட்டி உற்பத்தி 70 சதவீதம் நிறைவு

**ஈரோடு, நவ. 11-** பொங்கல் பண்டிகைக்கான இலவச வேட்டி உற்பத்தி பணியானது 70 சதவீதமும், சேலை உற்பத்தி 55 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொங்கல் பண்டிகையையொட்டி ஏழை, எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான உற்பத்தி கூட்டுறவு கைத்தறி மற்றும் விசைத்தறி சங்கங்கள் மூலம் நடந்து வருகின்றது. இந்நிலையில் வருகின்ற பொங்கல் பண்டிகைக்காக 6 வண்ணங்களில் இலவச சேலைகளும், பார்டருடன் கூடிய வேட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்தம் 1 கோடியே 68 லட்சம் வேட்டிகள், 1 கோடியே 68 கோடி சேலைகள் உற்பத்தி செய்யும் பணி கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகிறது. தமிழகம் முழுவதும் 228 விசைத்தறி சங்கங்கள் மூலம் வேட்டி, சேலை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையில், வேட்டி உற்பத்தி செய்யும் பணி 70 சதவீதமும், சேலை உற்பத்தி 55 சதவீதமும் நிறைவடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி, சேலைகள் தரம் ஆய்வு செய்யப்பட்டு பின்னர் எந்தெந்த மாவட்டத்திற்கு எவ்வளவு தேவை என்ற பட்டியல் அடிப்படையில் அனுப்பபட்டு வருவதாகவும், அரசு நிர்ணயித்துள்ள காலக்கெடுவுக்குள் வேட்டி, சேலை உற்பத்தி முடிக்கப்பட்டு விடும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருப்பூர் காதர்பேட்டையில்

# ஆடை விற்பனை அமோகம்

**திருப்பூர், நவ. 11-** தீபாவளி பண்டிகையையொட்டி, திருப்பூர் காதர்பேட்டையில் ஆடை விற்பனை சூடுபிடித்துள்ளது.

திருப்பூர் மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பனியன் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் ஜாப் ஒர்க் நிறுவனங்கள் உள்ளன. இவை ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு உற்பத்தி சார்ந்து செயல்படுகின்றன.

இவற்றின் உற்பத்தி சார்ந்து பனியன் மொத்த மற்றும் சில்லரை விற்பனைக்கென திருப்பூர் காதர் பேட்டையில் கடைகள் உள்ளது. இங்கு 100க்கும் மேற்பட்ட சில்லரை மற்றும் மொத்த ஆடை விற்பனை நிறுவனங்கள் உள்ளன.முதல் தரம், 2-ம் தரம் என தரங்களின் அடிப்படையில் குறைந்த விலையில் இங்கு பனியன் உள்ளிட்ட ஆடைகள் விற்பனை செய்யப்படுகின்றன. காதர்பேட்டை சந்தைக்கு வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வியாபாரிகள் வந்து மொத்தமாக பின்னலாடைகளை வாங்கி ஏற்றுமதி செய்வதும், வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதும் நடைபெற்று வருகிறது. இதனால் காதர் பேட்டையில் எப்போதும் ஆடை விற்பனை மும்முரமாக நடைபெறும்.

இதேப்போல் வடமாநிலங்களில் ஜவுளி கடை வைத்திருக்கும் வியாபாரிகள் மற்றும் மொத்தமாக ஆடைகளை வாங்கி விற்பனை செய்யும் வியாபாரிகள் என பலர் தங்களுக்கு தேவையான ஆடைகளை மொத்தமாக கொள்முதல் செய்து வாங்கி செல்வார்கள். இந்நிலையில் தீபாவளி பண்டிகை நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில், நேற்று, காதர் பேட்டை பகுதி கடைகளில் மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. சுடிதார், நைட்டி, குழந்தை ஆடைகள்;, ஜீன்ஸ், சர்ட், வேட்டி, லுங்கி, பனியன் ஜட்டி என உள்ளாடை ரகங்கள் விற்பனை அமோகமாக நடந்தது.இதுகுறித்து காதர்பேட்டை வியாபாரிகள் கூறுகையில்:

தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் இருந்து ஜவுளிக்கடை வியாபாரிகள், தரைக்கடை வியாபாரிகள் வந்து மொத்தமாக ஆடைகளை வாங்கி செல்கின்றனர். இதேபோல் பொதுமக்கள் எப்போதும் போல் ஆடைகள் வாங்கி வருகின்றனர் என்றனர்.

# சேவல் சண்டை; 6 பேர் கைது

**ஈரோடு, நவ. 11-** கோபி அருகே சூதாட்டத்தில் ஈடுபட்ட 6 பேரை போலீசார் கைது செய்தனர்.

கோபி அடுத்துள்ள அயலூர் பகுதியில் சேவல் சூதாட்டம் நடப்பதாக சிறுவலூர் போலீசாருக்கு நேற்று தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் அப்பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அயலூர் ஈசன் தோட்டத்தில் சேவல் சண்டையில் ஈடுபட்டிருந்த அயலூர், கிழக்கு தோட்டம், ஜெகதீசன் (31), மேட்டூர் சசிகுமார் (28), கோபி வெள்ளாளபாளையம் அபிஷேக் (23), அந்தியூர் சென்னசமுத்திரம் கார்த்தி (22), அவினாசி சேதுபதி (21), மொடச்சூர் சிவக்குமார் (35) ஆகிய 6 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 2 சேவல்கள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

# திமுக முன்னாள் எம்எல்ஏ மறைவு

**வேலூர், நவ. 11-** வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை உள்ளடங்கிய பழைய வடாற்காடு மாவட்டத்தில் திமுகவின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர்களில் ஒருவரும் திமுக மாவட்ட செயலாளராகவும் இருந்,தவர் தோப்பூர் வேங்கடம் (85). இவர் கணியம்பாடி சட்டமன்ற தொகுதியின் எம்எல்ஏவாக இருந்தார். வயது முதிர்வு காரணமாக வீட்டில் ஓய்வெடுத்து வந்தார். சில நாட்கள் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் அவர் வயது மூப்பு காரணமாக நேற்று காலமானார். அவரது இறுதிச்சடங்குகள் ஒடுகத்தூர் அடுத்த தோப்பூரில் இன்று நடக்கிறது.


**திருப்பூர் மாவட்டபதிவாளர் அலுவலகம்**
**கதவு எண்.1/529 நெருப்பெரிச்சல் கிராமம்,**
**சீட்டு நடுவர் மன்றம்**
**முன்னிலை:- திரு. த.லிங்கேஸ்வரன்,M.A.,B.L.,**
**மத்தியஸ்த வழக்கு எண்: 34/2023**

M/S.தனலட்சுமி சீனிவாசன் சிட் பண்ட்ஸ் (பி) லிமிடெட்., நெ.320,ஸ்ரீ முத்து பிளாசா, எதிர் சரவணபவன், திருப்பூர்-641 602 –வாதி

-Vs-

1. M/s.Shri Govarthana Knit Fab, Proprietor.R.Mohan Kumar, S/o.S.Ramasamy No.3,/306C, Kuppandampalayam, Veerapandi (Post), Palladam Road, Tirupur-641 605.
2. Mr.R.Mohankumar S/o.Mr.Ramasamy, Now Residing at No.2,/221, Sarasen Thottam, Kattoor (post), Pongalur Via, Tirupur-641 667
3. M.Shobana, W/o.R.Mohankumar, No.2/221, Sarasen Thottam, Kattoor (post), Pongalur Via, Tirupur-641 667
4. V.Manjunathan, S/o.mr.Veerasamy No.10/297, Amman Nagar, Veerapandi (post) Kunnungal Palayam Pirivu, Palladam, Tirupur-641 605.
5. K.Thangaraj, S/o.Mr.Kandhasamy, No.28, Velliyankadu, 2nd Street, 60 Feet Road, Tirupur-641 604
6. P.Ramesh, S/o.Mr.Palanisamy, No.1,1/299/2, Winner Garden South Avinashipalayam, Tirupur-638 660
7. Mr.S.Ramasamy, S/o.R.Sami Gounder, No.2/221, Sarasen Thottam, Kattoor (Post) Pongalur Via, Tirupur-441 667. –பிரதிவாதிகள்

PSO NO:209/2018
AGREEMENT NO:286/2018
CHIT GROUP/TKT NO:TU 92505/15

**மேற்படி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு**

மேற்படி வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வரவேண்டிய சீட்டு நிலுவைத்தொகைக்காக தாக்கல் செய்யப்பட்ட மனு வருகிற 27.11.2023ம் தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் வாய்தா அன்று முற்பகல் 11.00 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் உமது பெயரில் ஒருதலை பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்கிற விபரம் அறியவும். 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் தேதி நம்முடைய கையெழுத்து கோப்பும் முத்திரையும் போடப்பட்டுள்ளது. வாய்தா நாள்: 27.11.2023.

**சீட்டுநடுவர் நீதிமன்றம்,** திருப்பூர்

**திருப்பூர் மாவட்டபதிவாளர் அலுவலகம்**
**கதவு எண்.1/529 நெருப்பெரிச்சல் கிராமம்,**
**சீட்டு நடுவர் மன்றம்**
**முன்னிலை:- திரு. த.லிங்கேஸ்வரன்,M.A.,B.L.,**
**மத்தியஸ்த வழக்கு எண்: 33/2022**

M/S.தனலட்சுமி சீனிவாசன் சிட் பண்ட்ஸ் (பி) லிமிடெட்., நெ.320,ஸ்ரீ முத்து பிளாசா, எதிர் சரவணபவன், திருப்பூர்-641 602 –வாதி

-Vs-

1. Mrs.R.Padmapriya, W/o.Mr.B.Rathinavelu, No.106A, Navarathna Apartment, Solipalayam, Kaniyampoondi (Post), Tirupur-641 652.
2. Mr.B.Rathinavelu, W/o.Mr.Balakrishnan, No.106A, Navarathna Apartment, Solipalayam, Kaniyampoondi (Post), Tirupur-641 652
3. L.Govindasamy, S/o.Mr.laksmanan, No.130, Shri Vignesh Marketing, Bharath Gas Near, Kongu Main Road, Tirupur-641 607.

–பிரதிவாதிகள்

PSO NO:94/2018
AGREEMENT NO:95/2018
CHIT GROUP/TKT NO:TU 70506/25

**மேற்படி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு**

மேற்படி வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வரவேண்டிய சீட்டு நிலுவைத்தொகைக்காக தாக்கல் செய்யப்பட்ட மனு வருகிற 27.11.2023ம் தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின் வாய்தா அன்று முற்பகல் 11.00 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் உமது பெயரில் ஒருதலை பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்கிற விபரம் அறியவும். 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் தேதி நம்முடைய கையெழுத்து கோப்பும் முத்திரையும் போடப்பட்டுள்ளது. வாய்தா நாள்: 27.11.2023.

**சீட்டு நடுவர் நீதிமன்றம்,** திருப்பூர்

**திருப்பூர் மாவட்டப்பதிவாளர் அலுவலகம்**
**கதவு எண்.1/529 நெருப்பெரிச்சல் கிராமம்,**
**சீட்டு நடுவர் மன்றம்**
**முன்னிலை:- திரு.த.லிங்கேஸ்வரன்,M.A.,B.L.,அவர்கள்**
**மத்தியஸ்த வழக்கு எண்:53/2022**

M/s.தனலட்சுமி சீனிவாசன் சிட் பண்ட்ஸ்(பி) லிமிடெட்., நெ.320, ஸ்ரீ முத்து பிளாசா, எதிர் சரவணபவன், திருப்பூர்-641 602. –வாதி

–எதிர்–

1.Mr.K.Balaji, s/o B.Karthikeyan, No.A-55, Riyan Nagar, Sirumugai, Mettupalayam, Coimbatore-641302.
2. Mrs.S.Leelavathi, w/o K.Balaji, No.A-55, Riyan Nagar, Sirumugai, Mettupalayam, Coimbatore-641302.
3. Mrs.P.Latha, w/o.Mr.R.Somasundaram, No.35/158, Sri Murugan Nagar, Near Micro kids School, Kaniyampoondi, Tirupur-641 654
4.Mr.K.Thirunavukarasu s/o D.Kitchappan, No.58 College Road, Housing Unit, Odakkadu,Tiruppur-641602.
5. Mr.R.Kannan, s/o Mr. Ragavan, No. 1/1223 VP Garden ,Kasigoundenpudur, Velayuthampalayam, Avinashi,Tirupur-641 654.

–பிரதிவாதிகள்

PSO NO:178/2020
AGREEMENT NO:158/2020
CHIT GROUP/TKT NO:TU70512/47

**மேற்படி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு**

மேற்படி வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வரவேண்டிய சீட்டு நிலுவை தொகைக்காக தாக்கல் செய்யப்பட்ட மனு வருகிற 27-11-2023 தேதியன்று வாய்தா போடப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருப்பின் வாய்தா அன்று முற்பகல் 11.00 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் உமது பெயரில் ஒருதலைப் பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்கிற விபரம் அறியவும். 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 -ம் தேதி நம்முடைய கையெழுத்து கோப்பும் முத்திரையும் போடப்பட்டுள்ளது.

வாய்தா நாள் :27-11-2023

**சீட்டு நடுவர்**
சீட்டு நடுவர் மன்றம், திருப்பூர்

**திருப்பூர் மாவட்டப்பதிவாளர் அலுவலகம்**
**கதவு எண்.1/529 நெருப்பெரிச்சல் கிராமம்,**
**சீட்டு நடுவர் மன்றம்**
**முன்னிலை:- திரு.த.லிங்கேஸ்வரன்,M.A.,B.L.,அவர்கள்**
**மத்தியஸ்த வழக்கு எண்:12/2023**

M/s.தனலட்சுமி சீனிவாசன் சிட் பண்ட்ஸ்(பி) லிமிடெட்., நெ.320, ஸ்ரீ முத்து பிளாசா, எதிர் சரவணபவன், திருப்பூர்-641 602. –வாதி

–எதிர்–

1.B.Sasikumar, S/o.Mr.Balusamy No.71, Anna Colory, Gandhi Nagar (Post) Tirupur-641 603.
2. Mrs. S.Renukadevi, W/o.B.Sasikumar, No.71, Anna Colony,Gandhi Nagar (Post), Tirupur-641 603
3.R.Ravikumar, S/o.M.Raju Municipal Hr.See School, Padmavathipuram, Tirupur-641 603.
4. P.Lakshmanan, S/o.Mr.Panaiyan, Working at Municipal Hr.Sec School, Padmavathipuram, Tirupur-641 603
5.A.Muthuvel S/o Mr.Angappan, Working at Municipal Hr.Sec School, Padmavathipuram, Tirupur-641 603
6.M.Sasi Kumar, S/o. Mr.Manian, No.18-1-61A.KPN Colony, 4th Street, Tirupur-641 601.
7.S.Suresh, S/O Mr.Sellamuthu, Working at Panchayathu Union Middle School 15 Velampalayam, Tirupur-641 652.

–பிரதிவாதிகள்

PSO NO:95/2018
AGREEMENT NO:96/2018
CHIT GROUP/TKT NO:TU92504/44

**மேற்படி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு**

மேற்படி வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து வரவேண்டிய சீட்டு நிலுவை தொகைக்காக தாக்கல் செய்யப்பட்ட மனு வருகிற 27-11-2023 தேதியன்று வாய்தா போடப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருப்பின் வாய்தா அன்று முற்பகல் 11.00 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் உமது பெயரில் ஒருதலைப் பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்கிற விபரம் அறியவும். 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 -ம் தேதி நம்முடைய கையெழுத்து கோப்பும் முத்திரையும் போடப்பட்டுள்ளது.

வாய்தா நாள் :27-11-2023

**சீட்டு நடுவர்**
சீட்டு நடுவர் மன்றம், திருப்பூர்


# அமெரிக்காவுக்கு ஜவுளி ஏற்றுமதியை மேம்படுத்த கலந்துரையாடல்

**திருப்பூர், நவ. 11-** அமெரிக்காவுக்கு ஏற்றுமதி வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கில் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், ரேப், அமெரிக்கன் அப்பேரல் புட்வியர் மற்றும் ஏஏஐடபிள்யூ ஆகியவை இணைந்து திருமுருகன் பூண்டியில் நேற்று கலந்துரையாடல் நடந்தது. இதில் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் ரேப் நிறுவன தலைவர் அபெடிஸ் செப்பரியன், ஏஏஐடபிள்யூ தலைவர் நேட் ஹெர்மன் ஆகியோர் பங்கேற்றனர். திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பில் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் துணைத் தலைவர்கள் ராஜ்குமார், இளங்கோவன், இணை செயலாளர் குமார் துரைசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதியில் ரேப் தணிக்கை சான்றிதழ் அவசியமான ஒன்றாகும். பல்வேறு தணிக்கைகளுக்கு பிறகு அந்த அமைப்பு ஏற்றுமதி நிறுவனத்துக்கு வழங்குகிறது. இதன் மூலம் தொழில் நிறுவனத்தின் சட்டப்பூர்வ தொழில் பாதுகாப்பு,தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்,குழந்தை தொழிலாளர்கள் இல்லாமல் பணியிடங்கள் இருப்பது, சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் ஆடை உற்பத்தியில் ஈடுபடுவது என பல்வேறு தணிக்கைகளை ரேப் அமைப்பு மேற்கொண்டு சான்றிதழ் வழங்குகிறது.

அதன் ஒருபகுதியாக திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர். இதில் பங்கேற்றவர்கள் பேசியதாவது: தணிக்கை காரணங்களால் தொழில் பாதிக்கப்படக்கூடாது. சீனாவை நம்பி தொழில் துறையில் அமெரிக்கா இருக்கக்கூடாது.ஆகவே அங்கு தேவையான தொழில் வாய்ப்புகள் வியட்நாமுக்கு சென்றாலும், அந்தளவுக்கு பெரிய உற்பத்தி வசதிகள் அங்கு இல்லை. ஆனால் இந்தியாவில் அதற்கான அத்தனை விஷயங்களும் உள்ளன. சீனா பருத்தி உற்பத்தியில் தொழில் சுரண்டல் உள்ளது.ஆகவே இந்தியா தணிக்கை விஷயங்களை முறைப்படுத்தும்போது, அமெரிக்காவுக்கான ஏற்றுமதி வர்த்தகம் பல மடங்கு அதிகரிக்கும், என்றனர்.

அதேபோல் தணிக்கை விஷயத்தில் பொதுவான ஒரு தளத்தை உருவாக்கினால்,அதன் மூலம் ஏற்றுமதி தொழில்துறையினர் பயன்பெறுவார்கள். இதனால் ஆடை ஏற்றுமதி அமெரிக்காவுக்கு பல மடங்கு அபரிமிதமாக, அதிகரிக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# பர்கூர் மலையில் கஞ்சா செடி வளர்ப்பு: 2 பேர் கைது

**ஈரோடு, நவ. 11-** பர்கூர் மலையில் கஞ்சா செடி வளர்த்து வந்த 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

அந்தியூர் அடுத்த பர்கூர் மலை கிராமங்களான கொங்காடை, புலிதொட்டி பகுதியில் கஞ்சா செடி வளர்க்கப்பட்டு வருவதாக பர்கூர் போலீசாருக்கு நேற்று தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் அப்பகுதியில் சோதனை நடத்தினர். அப்போது முருகன் (30) என்பவரது வீட்டிற்கு பின்புறம் கஞ்சா செடி வளர்ப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து போலீசார் கஞ்சா செடியை பறிமுதல் செய்ததோடு முருகன் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். இதேபோல அதே பகுதியை சேர்ந்த சின்னமுத்து (45) என்பவர் தனக்கு சொந்தமான ராகி பயிர் காட்டிற்கு அருகில் உள்ள ஒரு பாறையின் அருகில் 2 கஞ்சா செடிகளை வளர்த்து வந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து சின்னமுத்து மீது போலீசார் வழக்குப்பதிந்து அவரை கைது செய்தனர்.


PRIME URBAN DEVELOPMENT INDIA LTD

**பிரைம் அர்பன் டெவலப்மென்ட் இந்தியா லிமிடெட்**

CIN: L70200TZ1936PLC000001

பதிவு அலுவலகம் : கதவு எண்.164/18 மருதாச்சலபுரம் மெயின் ரோடு, ரேஷன் கடை எதிரில், 60 அடி ரோடு, திருப்பூர் - 641 602 (தமிழ்நாடு, இந்தியா)

E-mail: companysecretary@ptlonline.com, Web: www.ptlonline.com

**30.09.2023 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் சுருக்கம்**

( ஒரு பங்கின் வருமானம் தவிர மற்ற தொகைகள் யாவும் ₹ இலட்சங்களில் )

| வ. எண் | விபரங்கள் | Standalone Results | | | Consolidated Results | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | காலாண்டு முடிவு 30.09.2023 Unaudited | அரை ஆண்டு முடிவு 30.09.2023 Unaudited | தொடர்புடைய காலாண்டு முடிவு 30.09.2022 Unaudited | காலாண்டு முடிவு 30.09.2023 Unaudited | அரை ஆண்டு முடிவு 30.09.2023 Unaudited | தொடர்புடைய காலாண்டு முடிவு 30.09.2022 Unaudited |
| 1 | செயல்பாடுகளின் மூலம் நிகர வருமானம் மற்றும் இதர வருமானம் | 24.66 | 49.31 | 27.18 | 200.87 | 402.25 | 232.94 |
| 2 | வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு முன்) | (40.80) | (101.89) | (20.57) | (39.09) | (98.01) | (37.78) |
| 3 | வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு பின்) | (40.80) | (101.89) | (20.57) | (39.09) | (98.01) | (37.78) |
| 4 | வரிக்கு பின்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (அசாதாரண செலவினங்களுக்கு பின்) | **(40.80)** | **(101.89)** | **(20.57)** | **(39.09)** | **(98.01)** | **(37.78)** |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் மற்றும் வரிக்கு பிந்தைய ஏனைய விரிவா வருமானமும் உள்ளிட்டது) | **(40.80)** | **(101.89)** | **(20.57)** | **(39.09)** | **(97.99)** | **(37.78)** |
| 6 | செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குத்தொகை (ஒரு பங்கிற்கு ரூ.2/- முக மதிப்பு) | 532.87 | 532.87 | 532.87 | 532.87 | 532.87 | 532.87 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உள்ளது போன்றது) | - | - | - | - | - | - |
| 8 | ஒரு பங்கின் வருவாய் (Face Value of Rs.2/- each) not annualised) | | | | | | |
| | அ. ஒரு பங்கிற்கான வருவாய் அசாதாரண அயிட்டங்களுக்கு முன்பாக | (0.15) | (0.38) | (0.08) | (0.15) | (0.37) | (0.14) |
| | ஆ. ஒரு பங்கிற்கான வருவாய் அசாதாரண அயிட்டங்களுக்கு பின்பாக | (0.15) | (0.38) | (0.08) | (0.15) | (0.37) | (0.14) |

குறிப்பு:

1. தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதி முடிவுகள் இந்தியன் கணக்கியல் தரநிலைகளில் (Ind AS 34) நிறுவனங்கள் சட்டம் 2013-ன் விதிகள் பொருந்தக்கூடிய மற்றும் SEBI (Listing Obligation and Disclosure Requirements) விதிமுறைகள் 2015இன் பத்திரங்கள் மற்றும் வழிகாட்டுதல்களால் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் அளவீடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன.
2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளை தணிக்கை குழு மதிப்பாய்வு செய்து 2023ம் ஆண்டு நவம்பர் 10 ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. Regulations 33 of SEBI (Listing and other Disclosure Requirements) Regulations, 2015-ன் படி இந்த முடிவானது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு.
3. மேலே உள்ளவை காலாண்டு நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஆகும். இதன் விரிவான முடிவுகளை நிறுவனத்தின் வலைதளமன www.ptlonline.com மற்றும் BSE லிமிடெட் lwww.bseindia.com வலைதளத்திலும் பார்வையிடலாம்.

(For and on behalf of the Board)
**புருஷோத்தம்தாஸ் பட்டோடியா**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்**
**DIN 00032088**

**இடம்:மும்பை**
**தேதி: 10.11.2023**


Printed & Published by **Mr. Syed Mohamed,** on behalf of M/s. Kal Publications Pvt Ltd. and Printed at Murasu Offset Press (Owned by Kal Publications Pvt Ltd.) No.1, Vincent Road, Coimbatore-641001. (Tamil Nadu) and Published at No.1, Vincent Road, Coimbatore-641001.
**Editor: Mr. Syed Mohamed,** RNI Regn: TNTAM/2005/51848 Phone: 0422 4467676, Advt: 0422 4467655, E-mail: tmurasucbe@gmail.com